# சர்வகட்சி மகாநாட்டு பிரதிநிதிகள் கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கல் இனம் காணப்பட்டது

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டுப் பிரதிநிதிகளின் செயற்குழுக் கூட்டம் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தலைமையில் நேற்று நடைபெற்றது. விடுதலைபுலிகள், மக்கள்முன்னணி, ஈழவர் ஜனநாயகமுன்னணி, ரெலோ, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி உட்பட 19 அரசியற் கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டன.

இக்கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கம் உட்பட இருபது விடயங்கள் இனங்காணப்பட்டன.

செயற்குழுவின் வேலை சம்

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 2 ஷஃபான் பிறை: 17 இதழ்: 30

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-03-1990

## திருமலையில் அமைதியும் சமாதானமும் ஏற்படும்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் அமைதிப் படை வெளியேற்றத்தைத் தொடர்ந்து இங்கு விடுதலைப் புலிகள் வந்துள்ளதால் அமைதியும், சமாதானமும் ஏற்படுமென இலங்கை இராணுவ உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலிகளிற்கும் - அரசுக்குமிடையில் மோதல் தவிர்ப்பு உடன்பாடொன்று காணப்பட்டுள்ளதால் இங்கு எந்தவித அசம்பாவிதங்களும் ஏற்படும் சாத்தியம் குறைவாகக் காணப்படு

(8-ம் பக்கம் பார்க்க)

# போராளிகளுக்கு இனிமேல் இந்தியாவில் பயிற்சி இல்லை!

## இலங்கையிலிருந்து வருவோரிடம் உள்ள ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன

(புதுடில்லி)

**போராளிகளைப் பயிற்றுவிக்கவோ, இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவோ இந்திய மண்ணைப் பயன்படுத்த எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என இந்திய அரசாங்கம் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.**

**'டைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.**

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வருபவர்களிடமிருக்கும் ஆயுதங்கள் பறிமுதல்செய்யப்படுகின்றன.

**வரதர் எங்கே?**

திரு. வரதராஜப்பெருமாள் எங்கு இருக்கிறார் என்பது பற்றித் தமக்குத் தெரியாது என்று இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் திரு. பெருமாள், இந்துசமுத்திரத் தீவாகிய மொரீஷியஸுக்கு சென்றிருக்கலாம் என்று 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை ஹேஸ்யம் தெரிவித்திருக்கின்றது.

## பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை இடமாற்ற பணிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை தலைமைத் தபால் நிலையத்தில் தற்போது இயங்கிவரும் பொலிஸ் நிலையத்தை அங்கிருந்து மாற்றும்படி தபாற் தந்தி தொலைத்தொடர்பு அமைச்சு பணித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

வடமராட்சிப் பகுதி தற்போது சுமுக நிலைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதால் பொதுமக்களின் அன்றாடத் தேவைகளும், தாபற் போக்குவரத்துகளும் அதிகரிக்கப்பட்டு வரு

(8ம் பக்கம் பார்க்க)

## அரசியலமைப்பின் 6வது திருத்தம் நீக்கப்படுவது நாட்டின் இறைமையை பாதிக்கமாட்டாது!

**- ரஞ்சன்**

(கொழும்பு)

அரசியலமைப்பின் ஆறுவது திருத்தத்தை நீக்குவதன் மூலம் நாட்டின் இறைமை பாதிக்கப்படமாட்டாது. 1978-ம் ஆண்டு அரசியலமைப்பிலேயே நாட்டின் இறைமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும், பாதுகாப்பு ராஜங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு ஆங்கிலப்பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

நாட்டின் இறைமையை அரசியலமைப்பு ஏற்கனவே பாதுகாக்கிறது இதற்கு ஆறுவது திருத்தம் அவசியமில்லை என அவர்மேலும் தெரிவித்தார்.

## நடமாடும் ஜனாதிபதி செயலகத்தில் பனைக்கு ஒரு பிரிவு

(யாழ்ப்பாணம்)

நடமாடும் ஜனாதிபதி செயலகம் புத்தளத்தில் நடைபெறும்போது, பனை அபிவிருத்திச் சபைக்கும் ஒரு பிரிவு ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இப்பிரிவில் புத்தளம் மாவட்டத்தில் பனை அபிவிருத்தி முயற்சிக்கான நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும் என பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. ஏ. நடராசா தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## முக்கிய தளங்களைத் தவிர்ந்த இலங்கை படை முகாம்கள் விரைவில் மூடப்படலாம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள முக்கிய கேந்திர பாதுகாப்பு தளங்களை தவிர ஏனைய இடங்களிலுள்ள இலங்கை படையினரின் முகாம்கள் விரைவில் மூடப்படலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முகாம்கள் மூடப்படவேண்டுமென அண்மையில் விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் அமைச்சர் ஜனப் ஹமீத்துடன் மேற்கொண்ட பேச்சுகளையடுத்து இதற்கான ஆரம்பநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக அண்மையில் வல்வையில் பொதுமக்கள் குடியிருப்பு பகுதியிலிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டதுடன் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கரடியனாறு, புலிபாய்ந்த கல்லிவி

(8ம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள் கூட்டத்திற்கு அரசு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதைக் கண்டித்து ஆறு எதிர்க்கட்சிக் கூட்டணி மேற்கொள்ளவிருந்த பொதுக் கூட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்க மறுத்துள்ளது,

மேற்படி தகவல் இந்த கட்சிகளின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அரசின் இந்த முடிவை சுதந்திரக் கட்சி, ஐ. சோ. மு. கம்யூனிஸ்ட் கட்சி, எல். எஸ். எஸ். பி, என். எஸ். எஸ். பி, டி. வி. ஜே. பி. வன்மையாக

(5ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபை ஊழியருக்கு நியமனக் கடிதங்கள்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திலுள்ள மாகாணசபைக் கிளையில் பணிபுரிந்த சுமார் 16 ஊழியர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண அரசு அமைய அடிப்படையில் நியமனக்கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

கடந்த 6 மாதங்களுக்கு மேலாக யாழ். பிறப்புப் பதிவாளர் அலுவலகத்திலும், மாகாணசபைக் கிளையிலும் லிகிதர் தரத்தில் பணிபுரிந்த மேற்படி ஊழியர்களை இம்மாதம் முதல் மாவட்ட ஆணையாளரின்கீழ்ப் பணிபுரியுமாறு இந்நியமனக் கடிதங்கள் தனித்தனியே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

[71]

## திருமலை நகருக்குள் வந்த புலிகளுக்கு பொதுமக்கள் பெருவரவேற்பு

(திருமலை)

திருமலை நகருக்குப் புலிகள் வாகனங்களில் வந்தபோது வீதிகளில் நின்ற மக்கள் பலத்த ஜயகோஷம்செய்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றார்கள்.

திருமலையிலுள்ள ஈ. என். டி. எல். எவ், ரெலோ முகாம்கள் புலிகள் வசமாகின. இம்முகாம்களைக் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கு புலிக்கொடிகளைப் பறக்கவிட்டனர்.

திருமலை நகரைவிட்டு நேற்று

(8ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின்சக்தியை இரு நாடுகளும் உணர்ந்துள்ளன

## ஜொனியின் நினைவுகூட்டத்தில் உரை

(வடமராட்சி)

''இன்றைய அரசியற்போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் பங்குமகத்துவமானது என்பதையும் ஆற்றல்மிக்க தன்மையுள்ள இயக்கமென்பதையும் இன்று இந்திய இலங்கை அரசுகள் நன்குணர்ந்து உள்ளன. மேலும் உலகின் தனித்துவமிக்க மாபெரும்இயக்கம் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் இயக்கம் என்பதையும் இவர்கள் ஒப்புக்கொண்டு வருகின்றார்கள்'' என்று வடமராட்சிப்பொறுப்பாளர் திரு தீபன் நேற்றுமுன் தினம் மாலை புலோலி கிராமக் கோட்டடியில் நடைபெற்ற லெப்ரினன் கேர்ணல் ஜொனியின் இரண்டாவது நினைவு தினக் கூட்டத்தின் போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், லெப்ரினன் கேர்ணல் ஜொனி போர்க்களம்பலகண்டு சாதனைகள் பல படைத்த மாவீரன். அப்பேர்ப்பட்ட வீரனை நிராயுதபாணியாக வன்னிக்கு அழைத்துவந்துசுட்டுக்கொன்றதன் மூலம் இந்திய இராணுவத்தினர் தமது கோழைத்தனத்தை வெளியுலகிற்கு உணர்த்தியதோடு இந்தியாவிற்கு உலக அரங்கில் பெரும் களங்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜொனியைப்போன்ற மாவீரர்களை இலங்கை – இந்திய இராணுவத்தினர் ஒளித்தாலும் அவ்வீரர்களின் தியாக ஒளியை மக்கள் மனதில் இருந்து அகற்றமுடியாது; மக்கள் மனதில் இருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்று கூறினார்.

மேற்படி நிகழ்ச்சி திரு. தீபன் தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் வீரர் லெப்ரினன் கேர்ணல் ஜொனியின் படத்தினை ஜொனியின் தந்தை திரு. எஸ். விக்னேஸ்வரன் திரைநீக்கிவைத்தார் மற்றும் வடமராட்சி இராணுவப் பொறுப்பாளர் திரு. சூசை, திரு கனகநாயகம், திரு. எஸ். கதிரேஸ், திரு. எஸ். அலோசியஸ் ஆகியோரும் உரையாற்றினர். (51)

# 6ம் ஆண்டு அனுமதி: இப்படி ஒரு இழுபறி!

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியின் முன்னணிப் பாடசாலைகளான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரிகளின் 6ம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதில் பெற்றோர்களுக்கும் கல்வித்திணைக்களத்திற்கும் இருந்து வந்த இழுபறியையடுத்து இவ்விரு கல்லூரிகளிலும் 6ம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதில் அதிபர்கள் கல்விஅமைச்சின் சுற்றுநிருப அறிவித்தல்களை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சின் செயலாளர் கேணல் வீ. எஸ். குடலிகம பெற்றோர்களுக்கு அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் 6ம் ஆண்டு அனுமதியில் கல்வி அமைச்சின் சுற்றுநிருப அறிவித்தல் மீறப்பட்டிருப்பதால் இப்பகுதி மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் பெற்றோர்களும் கவலையடைந்துள்ளதாக கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சுக்குப் புகார் செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சின் செயலாளர் கேணல் வீ. எஸ். குடலிகம எச்சரிக்கை அறிவித்தலை அனுப்பிவைத்துள்ளார்.

ஹாட்லிக் கல்லூரியிலும், மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் இதுகாலவரை ஆறும் ஆண்டிற்குமாணவர்களை அனுமதிக்கும்போது புலமைப் பரிசில் பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமைவழங்கப்பட்டது. மிகுதி மாணவர்கள் இலங்கையின் எந்தப் பாடசாலையில் கல்வி கற்றாலும் 6ம் ஆண்டு பிரவேசப்பரீட்சைக்குத் தோற்றி அதில் திறமையாகச் சித்தியடைந்திருந்தால் அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

இதுவரைகாலமும் தொடர்ந்துவந்த இந்த நடைமுறைகளை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் இம்முறை நீக்கி புதிய நடைமுறைகளைக் கொண்டுவந்தது இதனைத் தொடர்ந்து இவ்விரு முன்னணிப் பாடசாலைகளிலும் இதுவரை 6ம் ஆண்டு ஆரம்பிக்கப்படவில்லை.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனல் மிகுதி மாணவர்களை அனுமதிப்பதற்கு நடாத்தப்படும் பரீட்சைக்கு பருத்தித்துறை கொத்தணியிலிருந்து 65 மாணவர்களும், ஏனையவடமராட்சி கொததணியிலிருந்து 65 மாணவர்களும் ஹாட்லிக் கல்லூரிக்கும் பருத்தித்துறை புலோலி கொத்தணியிலிருந்து மட்டும் (அதுவும்வட இந்துமகளிர் கல்லூரி தவிர்ந்த) மெதடிஸ்த பெண்கள்கல்லூரிக்கும் தோற்றமுடியுமென கல்வித் திணைக்களம் கண்டிப்பானஉத்தரவொன்றைப் பிறப்பித்திருந்தது. இதனல் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, கரவெட்டி, நெல்லியடி, நாகர்கோவில், புலோலி, உடுத்துறை கொத்தணிப் பகுதிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இக்கல்லூரிகளில் கற்கும் வாய்ப்பு குறைக்கப்பட்டது.

தமக்கு ஏற்பட்ட இவ் அவல நிலை குறித்து கல்வி, கலாசார. தகவல்துறைஅமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். பெற்றோர்களின் இந்நீதியான கோரிக்கைக்கு அமைச்சின் செயலாளர் செவிசாய்த்தார். கல்லூரியின் அதிபர்கள் கல்வியமைச்சின் 6ம் ஆண்டு அனுமதி சுற்றுநிருப அறிவித்தல்களை மீறினால் அதிபர்களின் கீழ்ப்படிவின்மைக் குற்றத்திற்காக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் பெற்றோர்களுக்கு அறிவித்தார்.

மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் 6ம் ஆண்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான பிரவேசப் பரீட்சை யாழ். கல்வித் திணைக்களத்தின் உத்தரவின் பேரில் பருத்தித்துறை, புலோலி கொத்தணி மாணவர்களுக்குமாத்திரமே நடாத்தப்பட்டுள்ளது. ஏனையகொத்தணிப் பிரிவு மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படவில்லை ஹாட்லிக் கல்லூரியில் இதுவரைபரீட்சை நடத்தப்படவில்லை, (52)

# தெல்லிப்பளை பிரிவில் பெரும்பாலான'மாணவர்க்கு பல் வியாதி!

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பாடசாலைகளின் 90 வீதமான மாணவர்களுக்கு பல் வியாதி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள சகல பாடசாலை மாணவர்களையும்விசேட வைத்திய பரிசோதனைக்குட்படுத்தும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்கீழ் இதுவரை இப்பிரிவில் உள்ள 50 பாடசாலைகளில் இந்த விசேட வைத்திய பரிசோதனை இடம் பெற்றுள்ளது.

சுமார் 17 ஆயிரம் மாணவர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 90 சதவீதமான மாணவர்களுக்கு பல்வியாதிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கென பற்சிகிச்சை அளிக்க தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை பற்சிகிச்சை நிலையத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை ஒதுக்கப்பட்டுள்ளதால் இவ்வாறு பல்வியாதிகள் உள்ள மாணவர்கள் இச்சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (86)

## சனசமூக நிலைய சமாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசசபை சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் இன்றுகாலை கவிஞர் ப. வை. ஜெயபாலன் தலைமையில் கிளிநொச்சி கமநலசேவை நிலைய மண்டபத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மு. குமாரதாசன் கலந்து கொள்வார். (83)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


**வரி விளம்பரம்**

**விற்பனைக்கு**

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3576)

இரசாயனக் கலைச்சொற்றொகுதி விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 45/- மட்டும். தொடர்பு:- ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (எ-604)

**தேவை**

ஸ்ரான்லி வீதியில் பிரதான பகுதியில் நல்ல நிலையில் (3 அறை, தங்குமிட வசதி மற்றும் சகல வசதிகளுடன்) அமைந்த கடைக்கு பங்காளிகள் தேவை. பின்வரும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். ''தமிழ் பல்துறை சேவை'' இல. 28, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மோட்டார் பாட்ஸ் கடை, ஹாட் வெயர்ஸ் தொழில் செய்வதற்கு உகந்த இடம்). (ஏ-605)

**சேவை**

தங்க நகைகள் ரிப்பேர் செய்தும் பொலிசிங் இங்ரேவிங் மற்றும் கட்டிங் செய்தும் கொடுக்கப்படும். ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும். ஆர். ராஜகுமார, எஸ். ஆர். எஸ். கட்டிடம், சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-3593)

**அறிவித்தல்**

லங்கா ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி இறுதி D. A. M. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரர்கள் உடனடியாக கல்லூரி காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கௌரவ செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்தியசபை.
(3602)

**பல்கலைக்கழக வெளிநிலை விரிவுரைகள் 1990 91**

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப் பட்டப்பாட நெறிகளான

★ கலைமாணி B. A
★ விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
★ வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

புதிய பிரிவு விரிவுரைகள் 1-4-1990ல் ஆரம்பமாகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 20-4-1990

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மாணவர் கவனத்திற்கு:

- வணிகமாணி பட்டப்பாட நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 15-3-1990க்கு முன்னர் தொடர்பு கொள்ளவேண்டும்.
- பல்கலைக்கழகங்களின் முன்னணி விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ் நகரில் இதுவே.

(எ-3594)

**JAFFNA ACADEMY & School of Technology**

**G. C. E. A/L AUGUST 1990**

1990ம் ஆண்டு பரீட்சைக்கான வகுப்புகள்

19-08-90 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

பாடத் திட்டத்தின் முழு அலகுகளும் வினாக்கள் மூலம் முற்றாக மீட்டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர்:
St. Johns College,
Welfare Officeஇல்

விண்ணப்பப்படிவங்களை காலை 9 மணி முதல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

DIRECTOR.

376, Main Street,
Chundikuli.

(சி-3600)

# இருநாடுகளிலுமிருந்து பிரிந்து காஷ்மீர் தனி நாடாக மாறுவதை பாகிஸ்தான் ஒருபோதும் அனுமதியாது

## வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

**சுதந்திர தனி நாடாக காஷ்மீர் மாறுவதை பாகிஸ்தான் அனுமதிக்காது. இந்த நடவடிக்கைக்கு பாகிஸ்தான் முழு எதிர்ப்பையும் தெரிவிக்குமென வெளியுறவு அமைச்சர் சகப்ஸாதா யாகூப்கான் தெரிவித்துள்ளார். இதன் மூலம் தீவிரவாதிகள் மோசமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் திருமதி பெனுஷீர் பூட்டோவைச் சந்தித்தபின் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஜனுப் யாகூப்கான் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்;

ஜம்முகாஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் ஐ. நா. சபை தெரிவித்த கருத்தையே ஆதரிக்கிறது. இதன்படி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இந்தியாவுடன் சேர்வதா, பாகிஸ்தானுடன் சேர்வதா என மக்களே தீர்மானிக்க வேண்டும். இதேவேளை ஜம்மு-காஷ்மீரையும் பிரித்து 'காஷ்மீரை' சுதந்திர தனிநாடாக்க தீவிரவாதிகள் முயல்கிருர்கள். இதனை பாகிஸ்தான் வன்மையாக எதிர்க்கும் என்ருர்.

### பெனுஷீர் அறிவிப்பு

இதேவேளை ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இந்தியாவுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடாத்தத் தாம் தயாரென பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனுர்ஷீர் பூட்டோ அறிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் பிரதமரின் இந்த அறிவிப்பை பலரும் வரவேற்றுள்ளனர்.

விரைவில் இதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

கிரிக்கெட்:

# றிச்சர்ட் ஹாட்லி ஓய்வுபெறுகிருர்

(வெலிங்டன்)

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் றிச்சர்ட் ஹாட்லி டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளார். இம்மாத முடிவில் இவர் ஓய்வுபெறுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளரான இவர் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளாக 400 விக்கெட்டுகளை கைப்பற்றினுர் இவர், சிறந்த துடுப்பாட்டக்காரர் என்பதும் குறிப்பிடத்தக்கது

நியூஸிலாந்தில் தமது டெஸ்ட் ஆட்டங்கள் முடிவடைந்துவிட்டதாக குறிப்பிட்ட இவர் இம்மாதம் ஆஸ்திரேலியாவுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் கிரிக்கெட் போட்டியே தமது இறுதிப் போட்டியாக இருக்கும் என்றும் தெரிவித்தார். எனினும் நியூஸிலாந்தில் தமது மாநிலமான ஹன்ரபரிக்காக தாம் அடுத்த ஆண்டுவரை போட்களில் டங்குபற்றவுள்ளதாகவும் கூறினுர். (சி)

# நிக்கரகுவா மீதான தடையை அமெரிக்கா நீக்கியது!

(வாஷிங்டன்)

நிக்கரகுவாமீதான பொருளாதாரத் தடையை நீக்க அமெரிக்கா முடிவுசெய்துள்ளது. இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் 500 மில்லியன் டாலர் உதவிப் பொருளையும் அங்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டுள்ளர்.

கடந்த பல வருடங்களாக அமெரிக்கா நிக்கரகுவாவின் 'சன்டிநிஸ்ர' அரசுக்கெதிராக பொருளாதாரத்தடை விதித்ததுடன் 'கொன்ரு' கிளர்ச்சியாளர்களுக்கு இராணுவ உதவியையும் அளித்துவந்தது.

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அமெரிக்கச் சார்பு எதிர்க்கட்சிக் கூட்டணி வெற்றிபெற்றது. இதையடுத்து அமெரிக்கா பொருளாதாரத் தடையை நீக்க முடிவு செய்துள்ளது.

இதேவேளை புதிய அரசு பதவியேற்குமுன் 'கொன்ரு' கிளர்ச்சிப் படையைக் கலைக்க வேண்டுமென்று அதிபர் திரு. டானியல் ஒட்டேகா தெரிவித்துள்ளார். (சி)

## னம்பொருள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினர் மே மாதம் முதலாம் திகதி பனம்பொருள் கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர். (152)

## இந்தியா வரும் தமிழ் அகதிகள்

# பிரதமர் சிங்குடன் முக்கிய பேச்சுக்கள்

(புதுடில்லி)

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தமிழ் அகதிகள் வருவது தொடர்பாக இந்திய ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. பி. உப்பேந்திரா இவ்வாரம் பிரதமர் திரு. வி. பி. சிங்குடன் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார்.

இந்தச்சந்திப்பிற்கு முன் திரு. உப்பேந்திரா தமிழக முதல்வருடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும்புதுடில்லியில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றுதெரிக்கின்றது.

வடக்கு-கிழக்கில் நிலைமை சுமுகமாகிவருவதால் தொடர்ந்தும் இந்தியாவிற்கு அகதிகள் வருவது நிறுத்தப்படவேண்டும் என்றும் அடுத்த ஒரிரு மாதங்களில் இந்தியாவில் தங்கியிருக்கும் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை ஏற்படுமென்றும்அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (சி)

# "பெண்களின் சக்தி மகத்தானது!"

(காங்கேசன்துறை)

"பெண்கள் மென்மையான குணுதிசயங்களை உடையவர்கள். ஆனுல் எப்போதும் அவ்வாறு அருந்துவிடக் கூடாது. அநீதிகள் இழைக்கப்படும்போது அவற்றை எதிர்த்து வெற்றிகாணவேண்டும்".

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மகளிர் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அகில இலங்கை கம்பன் கழகத்தலைவர் திரு. இ. ஜெயராஜ் கூறினுர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மகளிர் குழுத்தலைவி திருமதி சசிதேவி கந்தையா தலைமைவகித்தார். திரு ஜெயராஜ் மேலும் கூறியதாவது.-

"எமது இலக்கியங்கள் காட்டும் பெண்மை எந்த வகையில் அமைந்தது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கண்ணகி எவ்வளவு மென்மையானவளாக சித்தரிக்கப்பட்டாள். ஆனுல் தனது கணவன் கொல்லப்பட்ட செய்தி கேட்டதும் அநீதிக்கு எதிராகப் போராட திண்மை கொண்டவளாக மாறினுள். சீதையும் மென்மையான உள்ளம் கொண்டவளாக விளங்கி தனக்கு தீங்கு வந்தபோது திண்மை பெற்றவளாக மாறினுள். இந்த நிலைதான் எமது தமிழ்பாரம்பரியத்தின் பெண்மைக்கு இலக்கணமாகத் திகழ்கிறது.

"பெண்கள் உள்ளத்தில் ஒழுக்கம் கெடாமல் அநீதிக்கெதிராக திண்மையுடன் செயல்பட்டால் பெண்கள் சக்தி மகத்தானது என்பதை உலகம் உணரும்" என்ருர்.

சங்கத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு எஸ். சிவமகாராஜா உட்பட பலர்உரையாற்றினர். மகளிர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (96)

## எட்டாம் ஆண்டிலும் புலமைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கு முகமாக எட்டாம் ஆண்டிலும் ஒரு புலமைப் பரீட்சையை நடாத்த கல்வித்திணைக்களம் தீர்மானித்துள்ளதாக கல்வி கலாச்சார தகவல்துறை அமைச்சர் திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

இப்புலமைப் பரீட்சையால், திறமையுள்ள வறிய மாணவ, மாணவிகள் மீண்டும் படிப்பை தொடர ஒரு சந்தர்ப்பமாக இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

## பத்திரிகையாளர் கொலை: கண்டித்து ஆர்ப்பாட்டம்

(இஸ்தான்புல்)

துருக்கியில் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதை கண்டித்து சுமார் 500 பத்திரிகையாளர்கள் அண்மையில்பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியுள்ளனர்.

அரசு இதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக தண்டிக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பத்திரிகையாளர் அரசியல் காரணங்களுக்காகவே கொல்லப்பட்டிருக்கலாமென்றும் அவர் அண்மையில் அரசுக்கு எதிராக எழுதிய கட்டுரையே இதற்குக் காரணமாக இருக்கவேண்டுமென்றும் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (சி)

## பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கொழும்பில்

(கொழும்பு)

'சார்க்' அமைப்பின்அடுத்த மாநாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இயாப் கூர்க்கான் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்.

மார்ச் 31க்குள் இந்தியப் படைவிலகினுல் மே மாதம் 'சார்க்' மாநாடுநடத்துவோம் என்று இலங்கை அரசு ஏற்கனவே தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (து)

## உற்பத்தி பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்தொழிலாளர் சங்கத்தின் சமாசத்தின் கீழ் உள்ள பனிக்கட்டி – மீன் தூள் ஆலைகளில் வேலைசெய்யும் ஊழியர்கள் தொடர்ந்தும் சட்டப்படிவேலை செய்துவருவதால், ஐஸ் கட்டிகள் உற்பத்தியும் மீன் தூள் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. (152)

# திபெத்தில்பெரும் ஊர்வலம் சீன ராணுவம் தயார்நிலையில்

(லாசா)

திபெத்தின் சுதந்திரம் கோரி இன்று தலைநகர் லாசாவில் பெரும் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, இதையடுத்து லாசாவில் பெருமளவு சீனத் துருப்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

திபெத் கடந்த பல வருடங்களாக சீனுவின் பிடிக்குள் இருந்துவருகிறது. சுதந்திரம் கோரி போராடிய ஆத்மீகத் தலைவர் தலாய்லாமா சீன அரசின் கெடுபிடிகளையடுத்து அங்கிருந்து வெளியேறி இந்தியாவில தஞ்சமடைந்துள்ளார்.

கடந்த வருடம் சமாதானத்திற்கான நோபல் பரிசு தலாய்லாமாவிற்கு வழங்கப்பட்டதையடுத்து திபெத்தியரின் சுதந்திரப் போராட்டம் பெரும் உத்வேகம் பெற்று புதுவடிவம் எடுத்துள்ளது. நோபல் பரிசு தலாய்லாமாவிற்கு வழங்கப்பட்டதை சீனு வன்மையாகக் கண்டித்ததும் தெரிந்ததே.

இன்று லாசாவில் நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு முன் எச்சரிக்கையாக நூற்றுக்கணக்கான திபெத்தியர் இராணுவத்தால் கைது செய்யப்படடுள்ளனர் மேற்படி ஊர்வலத்திற்கு ஆதரவு தெரிவித்து தலாய்லாமா செய்தி ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். (சி)

## தையல் பயிற்சி நிலையம்

(நாவற்குழி)

எண்பது யுவதிகள் பயிற்சி பெறக்கூடிய தையற் பயிற்சி நிலையம் ஒன்று மறவன்புலோவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது

பயிற்சி நிலையத்தை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சுந்தரம்பிள்ளை திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ் சீவரத்தினமும் கலந்துகொண்டார். (107)

### மணிவாக்கு

வலிமை என்பது உடலின் பலத்தால் உண்டா வதன்று. அது மன உறுதியிலிருந்து உண்டாவதாகும்.

— மகாத்மா காந்தி.

# நமது நோக்கு

## வளர்ச்சிக்கு வேண்டும் விஞ்ஞான யுக்திகளும்!

"வடக்கு,கிழக்கு மாகாணத்தில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலை இன்றில்லை. மாறி வரும் விஞ்ஞானத்திற்கேற்ப, அறிவு பூர்வமான யுக்திகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யவேண்டும்!" இப்படி யாழ். பல்கலைக்கழகத் தாவரவியற் பேராசிரியர் 'புவியியலாளன்' இதழ் வெளியீட்டு விழாவிற் கூறியுள்ளார்.

பயிர்வளர்ச்சி, காடழிப்புப் போன்றவற்றினை உதாரணம் காட்டி, நாட்டிலே அறிவுபூர்வமான சருத்துக்களின் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

அபிவிருத்தி பற்றிய திட்டங்கள் பல முன்வைக்கப்படுகின்றன. எமது பகுதியில் அக்கறை கொண்ட பலர் வளர்ச்சிக்கான கருத்துக்களை முன்வைக்கும்போது அவை சீர்தூக்கிப் பார்க்கப்படவேண்டும்.

தரப்படும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் நாடு சொர்க்கபூமியாகிவிடும் என்பதை நாம் மறுக்கவில்லை.

ஆனால், அத்திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதற்கான நிதிவளம், தொழில் நுட்பவளம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப்படவேண்டாமோ?

நாடு தற்போதுள்ள நிலையில், மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் துரித வளர்ச்சி காணப்படவேண்டும் என்பதில் இருகருத்து இருக்கமுடியாது

ஆனால், எமது பகுதியின் புவியியற் பின்னணி, கிடைக்கும் வளங்கள், அவற்றை வீணாக்காது கூடிய பயனைக் குறைந்த செலவிற் பெறும் யுக்திகள் ஆகியவற்றையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

அந்தவகையிற் பேராசிரியர் கருத்து கவனத்தில் எடுக்கவேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

கிடைக்கும் நிதிவளங்களைப் பொறுத்து முன்னுரிமைப் பட்டியலின்படி வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தவேண்டும்.

நாட்டுவளம், தொழில்நுட்பவளம், முன்னுரிமைப் பட்டியல் தயாரிப்பு போன்ற இன்னபிற வேலைகளைத் தயாரிப்பதற்கு அதிகாரிகளுக்குப் போதிய ஆலோசனைகளை வழங்கவேண்டியவர்கள் யார்?

பல்கலைக்கழகம், ஆய்வு மன்றங்கள், துறைகள் தோறும் நிபுணத்துவம் பெற்றோர் ஆகியோரது கூட்டு முயற்சிகள் அவசியம்.

பல்கலைக்கழக மட்டத்திலிருந்து உதவியைப் பெறத் தவறுகிறார்கள் எனப் பேராசிரியர் கவலைப்பட்டுள்ளார்.

போதியளவு இணைப்புகள் - தொடர்புகள் - யார் இதைச் செய்வது என்ற ஐயப்பாடுகள்-ஆகியனவற்றால் உரிய ஆலோசனைகள் உரிய இடங்களுக்குச் செல்லாதிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டவிரும்புகிறோம்.

பல்கலைக்கழகமே தானாக முன்வந்து சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்கான ஆய்வுகளையும் முடிவுகளையும் கொடுத்துதவ வழிவகை காணவேண்டும்; இணைப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

## தவக்கால நற்சிந்தனை

"இன்றைய உலகில் சாத்தான் ஓய்வில்லாது செயலாற்றுகின்றான். உங்களை அறியாமலே உங்கள் வாழ்க்கையை அவன் நெறிப்படுத்தவிட்டு விடுகிறீர்கள். அவனுக்கு விட்டுக் கொடாதீர்கள் குடும்பமாக செபியுங்கள். ஏழைகளை புறக்கணியாதீர்கள்... உன் அருகே இருக்கும் சகோதரனை விட நீ நல்லவன் என உன்னை நீ ஏமாற்றாதே... ஜெபத்துக்கு திரும்பிச் செல்லுங்கள். அதைவிட முக்கியமானது ஒன்றுமில்லை. ஜெபத்திற்கும், உபவாசத்திற்கும, தவத்திற்கும் உன்னை அழைக்கின்றேன். நீ உபவாசமிருப்பது மற்றவருக்கு அறியப்படுத்த வேண்டியதில்லை".

உண்மையை உணர இன்றும் காட்சி தந்த அன்னை மரியாள் மஜகோரியில்வைத்து ஆறுபேருக்கு தொடர்ந்து கூறி வருகிறாள். இது உலகில் உள்ள யாவருக்கும் பொருந்தும். பலவித சோதனைகள், போலிகளைத் தாண்டித்தான் உண்மைக் கடவுளை சென்றடைய முடியும் என்பதற்கு அன்னையின் ஆலோசனையை இத்தினங்களில் ஆழமாகச் சிந்திப்போம்.

சகோ. பி. மாா்க் இக்னேசியஸ் C. M. S.F.

## அழுகும் நிலையில் வெங்காயம்

(காங்கேசன்துறை)

வலி வடக்கில் அறுவடை செய்யப்பட்ட பெருமளவு வெங்காயம் திடீரென பெய்த மழை காரணமாக தோட்டங்களிலே கிடந்து அழுகி நாசமாகும் நிலை ஏற பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் தாம் செய்கை பண்ணிய வெங்காயத்தை அறுவடைசெய்து தோட்டங்களிலேயே உலரவிட்டிருந்த சமயத்தில் திடீரென பெய்த மழையால் இந்த வெங்காயம் அழுகி நாசமாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்செலவில் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கை இவ்வாறு பாதிப்புற்றுள்ளதால் பெரு நஷ்டமேற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.(86)

### மாணுக்கர் மலர்ச்சிக்காக

## பாடசாலை மாணுக்கர்களிற் காணப்படும் உடல்நலக் குறைபாடுகள்

**இளம் சமுதாயம் வளர்ச்சிபெற வேண்டுமாயின் பல்வேறு துறைகளிலும் கண்காணிப்பும் வழிகாட்டல்களும் அவசியம். அவர்களின் உடல்நலக் குறைவுகள்பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும் அறிந்திருக்க வேண்டியன இங்கு தரப்படுகின்றது.**

### (8) காது

**(அ) காதால் வழியும் சீழ்:**

பூச்சி, கல், அல்லது விதை உட்புகுவதால் ஏற்படுகின்றது. தொற்றினாலும் ஏற்படும். நோய் காதிலிருந்து மூளைக்குப்போய் கடுமையாகலாம். இலங்கையில் ஏற்புவலி உண்டானவர்களில் 20 வீதமானோர் முதலிற் காது வருத்தத்தாற் பாதிக்கப் பட்டவர்களே.

**(ஆ) காது மந்தமாகக் கேட்டல்;**

பலதரமான செவிட்டுத் தன்மையுண்டு. சில சொற்கள் கேட்காமலும் இருக்கும்.

ஆசிரியர் எப்படிப் பரிசோதிக்கலாம்? இடதுகாதை விரலாற் பொத்திக்கொண்டிருக்க சில சொற்களைக் கூறி பிள்ளையைத் திருப்பிக் கூறச் சொல்லலாம். இதேபோல வலது காதைப் பொத்திக்கொண்டிருக்க பரிசோதிக்கலாம்.

### (9) வாய்

**(அ) கடைவாய் புண்:**

நாக்கு அவிதல், உதடு வெடித்தல் - இவை உயிர்ச்சத்து B குறைவால் ஏற்படும்.

**(ஆ) முரசு**

சிவந்த இரத்தம் வடியும். உயிர்ச்சத்து C குறைவால் ஏற்படும். வாயை சுத்தமாகவைத்திராததினால் ஏற்படும். தொற்றினால் முரசு வீங்கியும் தோன்றும்.

**(இ) சூத்தப்பல், துர்நாற்றம்:**

வாயை நன்றாகக் கழுவாததினாலும், மலர்சிக்கலினாலும், மாச்சத்துக்கள் பல்லில் ஒட்டிக்கொண்டு புளிப்படைந்து கிருமிகள் வளர வாய்ப்பாகின்றது.

உடன் கவனியாது விட்டால், துவாரம் பெருத்து, உணவுப்பொருட்கள் புகுந்து அழுகும்.

**(ஈ) பல் மிதந்து இருத்தல்** (Malocclusion

வாயை மூடும்போது ஓரிரு பற்கள் வெளியே தெரிகின்றன. 'கிளிப்' செய்வது மூலம் சிறுவயதிலேயே இது திருத்தப் படலாம்.

### (10) பூச்சிகள்

தானப்பூச்சி, வட்டப்புழு, கொழுக்கிப்புழு போன்றவற்றால் ஏற்படும் கெடுதிகளை மாணுக்கருக்கு விளக்கி, சுத்தமாக இருக்கவும், ஆலோசனைகள் வழங்கவேண்டும்.

வைத்தியர் ஆலோசனையுடன் பூச்சி மருந்துகளை எடுக்கவும் வழிகாட்டவேண்டும்.

### (11) நிர்ப்பீடனம்

(Immunisation)

சிறுவர்கள் பலர் தொண்டைக்கரப்பான், ஏர்ப்புவலி, குக்கல், சிறுபிள்ளை வாதம் ஆகிய நோய்களினால் தாக்கப் படுகின்றனர்.

இதற்குரிய தடுப்பு ஊசிகளையும் மருந்துகளையும் எடுப்பதற்கு மாணுக்கர் மூலம் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும.

பல பெற்றோரும், மாணுக்கரும் தடுப்பூசி போடுதலைப் பற்றி பூரணமாக விளங்கிக் கொள்ளாத காரணத்தால், இவற்றில் அக்கறை எடுப்பதில்லை,

பாடசாலைகளிலே, பாட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களிலே, சுகாதாரப் பகுதியினரின் ஒத்துழைப்போடு, உடல் நலம் காக்கும் கருத்துக்களைப் பரப்ப ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

சஞ்சிகைகளில் வரும் சுகாதாரக் கட்டுரைகளை வாசிக்கவும் வழிகாட்டுதல் அவசியம்.

(முற்றும்)

தொகுப்பு- சிவா

## கானகத்தின் மத்தியில் கருணை மழை பொழியும் மருதமடு அன்னை

[மருதமடு திருப்பதியில் பங்குனி திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது- இத்திருவிழா இன்று நடைபெறும் திருநாள்பாடற் திருப்பலி அதனைத் தொடர்ந்து மருதமடு மாதா சொரூப திருப்பவணி - சொரூப ஆசீர்வாதம் ஆகியவற்றுடன் நிறைவு பெறுகிறது.]

மருதமடு திருப்பதி ஆலயத்தின் முன்பாக அலை அலையாக மக்கள் வெள்ளம். மருதமடு அன்னை சொரூபமாக பீடத்தின் முன்பாக வீற்றிருக்கின்றாள். அம்மா தாயே என்குரல் உன்காதில் விழ ?ல்லையா? காதென்ன செவிடா? கண் என்ன குருடா? என்று தமிழ் மக்களின் வேண்டுதல் ஒலி வானைப் பிளக்கின்றது. சிங்கள மக்களும் சாந்த மரிய நீ தேவ மேனிய நீ— ஆசீர்வதிக்கவேவா- என வேண்டுகின்றனர். மருதமடு மாதாவே மனுக் குலத்தின் தாயாரே! என்ற பாடல்களும் காதில் ஒலிக்கின்றன— நீல வெண்ணிறக் கொடிகளுக்கிடையே "வாழ்க மரியே" என்ற வாசகம் காற்றில் அசைந்து கொண்டிருக்கிறது. செந்தமிழர் - சிங்களவர் - முஸ்லீம்கள் – பறங்கியர் வெள்ளைக்காரர் என்று பாகுபாடின்றி மக்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் கண் நோக்குகிறாள் மருதமடு அன்னை. இந்தக் கண்கொள்ளாக் காட்சி அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக எந்தவித திருவிழாக்களும் மருதமடுத் திருப்பதியில் நடைபெறவில்லை: ஆனால் நேர்த்தி செலுத்துபவர்கள் அமைதியாக இங்கு வந்து அன்னையிடம் வேண்டிச் செல்லுகின்றனர். மருதமடு அன்னையின் புதுமைகளை கேள்விப்பட்ட பிறசமயத்தவர்களும் இங்கு வந்து செல்கின்றனர். தற்பொழுது மன்னார் ஆயர் அருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகள் நிர்வாகத்தின் கீழ் மருதமடு திருப்பதி மிகப் பெரிய யாத்திரை ஸ்தலமாக விளங்கி வருகிறது.

### மாந்தை மாதா

மாந்தை கிறிஸ்தவர்கள் தாங்கள் பாதுகாத்து வணங்கி வந்த மருதமடு அன்னையின் சொரூபத்தை யானை, புலி, கரடி, சிங்கம் வாழும் மருதமடு கானகத்திற்கு கொண்டு வந்துவணங்கி வந்தார்கள் என்று மன்னார் வேதசாட்சிகள் சரித்திரம் கூறுகின்றது. மாந்தை மாதா தான் இன்று கோடானு கோடி மக்களின் வானக அரசியாக மனுக்குலத்தின் மாதாவாக காட்டுக்குள் இருந்து கருணை மழை பொழிந்து புதுமைகள் பல செய்து மக்களின் துன்பங்களைத் தீர்த்து வருகின்றார்.

### திருவிழாக்கள்

ஆடி 2ந் திகதி அடுத்த மடுத் திருவிழாவும், ஆவணி 15ந் திகதி பரலோக அன்னையின் விண்ணேற்பு தினமாகவும் கொண்டாடப்படுகிறது, மற்றைய திருவிழாக்கள் புரட்டாதி-08, ஐப்பசி-07, மார்கழி-08. ஒவ்வொரு சனிக்கிழமையும் திருப்பலி நடைபெற்று வருகிறது.

பிரான்சிஸ்

# பலதும் பத்தும்

### அங்கு நடப்பவை!

சில வாரங்களுக்கு முன் அமெரிக்கா பனமாமீது படை எடுத்த தல்லவா?

அந்த நாட்டு ஜனதிபதி நொரிக்கா அங்குள்ள வத்திக்கான் தூதரகத்தில் சரண் புகுந்தார். அவரைக் கைப்பற்ற அமெரிக்கா பல முயற்சிகளை எடுத்தது. ஒலிபெருக்கி மூலம் விடாது சததமிட்டுப் பார்த்தது.

நெருக்கடிகள் தாங்காது நொரிக்கா சரணடைந்தார். அவர்மீது அமெரிக்க நீதியன்றத்தில் விசாரணை.

அவர் செய்த குற்றமென்ன?... போதை வஸ்தைக் கடத்தினவராம்!

தற்போதைய அமெரிக்க ஜனதிபதி ஜோர்ஜ் புஷ் முன்னர் சி. ஐ. ஏ. தலைவராகப் பணியாற்றியவர்.

இப்போது வெளிவரும் செய்திகள் என்ன? நொரிக்காவும் முன்னர் சி. ஐ ஏ. ஏஜென்டாம். கோஸ்டா ரீக்காவில் உளவறிய உதவினராம்.

"நீதிமன்ற விசாரணையில் மேலும் பல தகவல்கள் வெளிவரலாம் - இப்படி நொரிக்கா கூறியிருக்கிறார். தன்னை யுத்தக் கைதியாக கருதவேண்டும் எனக் கோரினார். கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.

இதில் என்ன சூக்குமம்? ஜெனிவா சர்வதேச உடன்படிக்கைப்படி யுத்தக் கைதிகளுக்கும் படி வழங்க வேண்டும். வாராந்தம் 50 டொலர் அவருக்குக் கிடைக்கிறது!

வாணி

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** குறைந்த செலவில் வெளிநாடுகளுக்குத் நேரடித் தொலைபேசிச் சேவை கிடைக்கும் என்கிறுர்கள். இது உண்மையா?

ம. கந்தசாமி – அராலி

**பதில்:** விசேட வெளிநாட்டு நேரடித் தொலைத் தொடர்புச் சேவை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரவு 12-00 மணி முதல் காலை 6-00 மணி வரை பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும்.

1. அவுஸ்ரேலியா ——... 43/- ஒரு நிமிடம்
2. இந்தியா, மாலைதீவு, நேபாளம் பாகிஸ்தான். 30/- ,,
3. பாஹரேயின், எகிப்து, குவைத்து, சவூதி அரேபியா, U A. E, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி 57/- ,,
4. அமெரிக்கா, கனடா 63/- ,,

குறிப்பு; வழக்கமான இரவு 8–00 மணி முதல் காலை 8-00 மணி வரையிலும் சனி, ஞாயிறுகளிலும் அரைக்கட்டண சேவை தனியானது மேலே குறிப்பிட்ட சேவை Direct Dialing வசதியுள்ள இடங்களிலேயே கிடைக்கும்.

## சஞ்சலங்கள் தீர்க்கும் சங்கத்தானைக் கந்தன்

சங்கத்தானைக் கந்தன் மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

சாவகச்சேரி சங்கத்தானையில் கந்தப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக வீற்றிருந்து அருளொளி பரப்புகிறுர். பல நூறு வருடங்களுக்கு முன்பு சிறிய ஓலைக்குடிசை ஒன்றில் வைத்து வழிபாடு செய்யப்பட்ட இந்த ஆலயம் 1875 ம் ஆண்டு வைரவநாதர் வாரித்தம்பி விதானையார் அவர்களால் சிறிய கற்கோயிலாக நிறுவப்பட்டது. அவருக்குப்பின் அவரது மகன் கரைச்சி மணியகாரனுன வேலுப்பிள்ளை என்பவர் கோயிலை நிர்வகித்தார். அடுத்து அவரின் மகனுன இலங்கைப் புகையிரதப் பகுதிச் சிறுப்பர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் நிர்வாகப் பொறுப்பையேற்றுர். இனறு திரு, சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் அவர்களின் பொறுப்பில் இருக்கிறது.

ச. ஞா. மு.

தாமோதரம்பிள்ளை

முருகப் பெருமானும், நண்ணியவர்க்கு நன்மைகள் செய்யும் வைரவக்கடவுளும் இவ்வூர் மக்களின் குல தெய்வங்களாக விளங்கி வருகின்றனர். கோவில் அமைந்துள்ள காணி ''தென்னை மரத்தடி வளவு'' எனப்படும். அதே வேளையில் ஆதியில் ஆலயம் அமைந்த இடம் தேததா மரத்தின்கீழ் என்றமையாலேயே இது தேத்தாவடிக் கந்தசுவாமி கோவில் என்று அழைக்கப்பட்டது.

கோவிற் திருப்பணியின் பொருட்டுத் திருப்பணிச் சபையினர் ஒன்று ஆரம்பத்திலிருந்தே இயங்கி வந்தது. கோவிலின் வெளிமண்டபம் திரு. பரமர் கைலாயர் செல்லையாவினுல் கட்டப்பட்டது. மணிக்கோபுரம் திருமதி பரமர் செல்லத்தினுல் அமைக்கப்பட்டதுடன் 966ல் வெளி மண்டபத் தரைக்குச் சிமெந்து வ. வைரமுத்து ஆசிரியரின் உபயமாக இடப்பட்டது. 1965ம் ஆண்டு ஞானமூர்த்தி முருகேசு அவர்கள் திருப்பணிச் சபையின் தலைவராக இருந்த காலத்தில் கோபுரவாயில், சுற்றுமதில், வைரவர் சந்நிதி புதுப்பிக்கப்பட்டன. திரு. வே. இ. சண்முகம் அவர்கள் சபைத் தலைவராக இருந்த காலத்தில் அவரது முயற்சியினுலும் சங்கத்தானை இளைஞர்களின் ஒத்துழைப்பினுலும் புதிய ஒரு வசந்த மண்டபம் ஸ்தாபிக்கப்பட்டது. திரு. க. தாமோதரம்பிள்ளை அவர்கள் சபையின் தலைவராக இருந்த போது 1981ல் கோயில் மீளமைப்புக்கருதி முருகன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

மீண்டும் திருப்பணி வேலைகள் திரு. வே. இ. சண்முகம் குடும்பத்தினரின் பெரும்முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. கோவில் மூலஸ்தாபனத்தில் கந்தசுவாமி, வள்ளி, தெய்வானையின் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோவில் மண்டபங்கள் மூலஸ்தானம், பரிவார மூர்த்திகள் சந்நிதிகள், வசந்த மண்டபம் எனபன புதுப்பிக்கப்பட்டு புதுப்பொழிவோடு மிளிரும் இத்திருக்கோவிலில் 16–ம் திகதியாகிய நாளை மஹாகும்பாபிஷேகம் செய்யப்படுகிறது இன்னும் கோவில் சுற்றுமதல் வேலைகளும் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

1964ம் ஆண்டிலிருந்து திரு. இராமலிங்கம் இரத்தினசிங்கம் அவர்களின் முனைப்பினுல் வெள்ளிதோறும் கூட்டுப் பிரார்த்தனையும், பஜனையும் இடம் பெற்று வந்தது. அண்மையில் நாட்டின் சூழ்நிலை காரணமாக இதில் ஒரு தேக்க நிலை இடம் பெற்றுலும் இனிமேல் இது தொடரும் என்பதில் ஐயமில்லை.

இக் கோவிலில் முன்பு புராண படனம் மிகவும் ஒழுங்காக இடம் பெற்றது. நாவலர் பெருமானின் மாணவரான வித்துவான் பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் இங்கு புராண வகுப்புகளை நடாத்தி வந்தார். அவரிடம் படித்தவர்களுள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ஞானமூர்த்தி முருகேசு என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். ஞானமூர்த்தி முருகேசு அவர்களால் இச்கோவிலில் பல காலமாகக் கந்தசஷ்டி, திருவெம்பாவைக் காலங்களிலே கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணப் படிப்புகள் நடத்தப்பட்டன. யோகசுவாமி அவர்கள் திரு. பொன்னம்பலம்பிள்ளை அவர்களுடன் வந்து உரையாடிக்கோவிலில் தங்கிச் செல்லும் பல சந்தர்ப்பங்கள் இருந்தன.

இத்தகைய மூர்த்தி, தல விஷேடம் பெற்ற முருகப் பெருமான் சந்நிதியில் சென்று அவனது திருவடிகளை இறுகப் பற்றிப் பிடித்து நாம் எல்லோரும் உய்வடைவோமாக!

சங்கத்தானைக் கந்தன்
அவன் எம்
சஞ்சலம் யாவும்
தீர்த்திடுவான்!

## "இந்திய படையின் நோக்கத்தை திலீபனின் தியாகம் காட்டியது"

### - ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

''இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது, எமக்கு விடிவு கிடைத்துவிடும் என்ற மயக்கநிலை மக்களின் ஒருபகுதியினருக்கு ஏற்பட்டதை நாம் மறக்கவில்லை. திலீபனின் தியாகம் இந்தமயக்கத்திலுள்ள மக்களை மீட்க உதவியது; இந்தியாவின் நோக்கம் என்ன? எமது கோரிக்கைகள் என்ன? எதற்காக நாம் தியாகங்கள் பல புரிந்து போராடி வருகிறோம் என்பதை எல்லாம் தெளிவாக்க உதவியது''.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் வலிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் பண்டத்தரிப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்;

''தென் பகுதியிலே இனவாதத்தைத் தூண்டிப் பதவிக்கு வந்து கொண்டிருந்தார்கள் ஆனல் எமது போராட்ட உத்திகளை உன்னிப்பாகக் கவனித்தவர்கள் இன்று இதே பாணியிற் பதவிக்கு வரமுடியாதவர்களாகி விட்டார்கள்.

எனவே நாம் உறுதியான நிலையிலிருந்தே பேச்சுவார்த்தை நடாத்தி வருகிறோம் மேலும் எம்மை நசுக்க முயன்றுல், இராணுவரீதியாக வேனும் உரிமைகளை வென்றெடுப்போம் என உறுதி கூறுகிறோம்.

முழு மக்களையும் இணைத்துப் பலம் படைத்த அமைப்பாக எமது மக்கள் முன்னணியை ஆக்க முயற்சிக்கிறோம் இதற்குச் சகலரும் பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும்!''

மக்கள் முன்னணியின் மாணவர் அமைப்பைச் சேர்ந்த செல்வன் க. செல்வம் பேசுகையில், கல்வியில் பயனுள்ள மாற்றங்கள் வேண்டுமென்பதையும், ஆபாசச் சினிமாக்கள் தடை செய்யப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினுர்.

திரு. க செல்வநாயம், நா. குகராசா, திரு. ச. பிறைசூடி, திரு. க. குலசூரியர் ஆகியோரும் கருத்துரை வழங்கினுர்கள்.

விடுதலைப் புலிகளின் வரலாற்று வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் கட்டிடக்கலை, மரவேலை தொழில் பயிற்சி ஆரம்ப விழா இன்று காலை, ஒன்பது மணிக்கு காரைநகர் போரூட் நிலைய மண்டபத்தில் நடைபெறும் இப்பயிற்சியினை யாழ் மாவட்ட தொழில் உதவி ஆணையாளர் கே. சிவப்பிரகாசம் பயிற்சியை ஆரம்பித்து வைப்பார், இவ்விழாவில் போரூட் வதிவிட பிரதிநிதி ஆரே எரிக்சன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எஸ். சீவரெத்தினம், போரூட் திட்ட இயக்குனர் எம். எவ். மரிக்னர் கலந்து கொள்வர். இதனைத் தொடர்ந்து காரைநகர் துறைமுகத்தில் அமைந்துள்ள குளோப் நூலகத்தின் திறப்பு விழா இன்று காலை பதிரொரு மணிக்கு நடைபெறும். (12)

## 7 மாணவர் சித்தி

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்திலிருந்து ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஏழு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் திரு. என். சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (52)

## 'தாயகத்தின் குரல்'

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு நகரில் 'தாயகத்தின் குரல்' என்னும் வர்த்தகவிளம்பரசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒலிபரப்பில் புரட்சிக்கீதம், தத்துவப்பாடல்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இச்சேவைக்கு முல்லை மாவட்ட கலை கலாசாரப் பிரிவின் அங்கீகாரம் பெற்றே ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (144)

## க. பொ. த. உயர்தர பரீட்சை ஹாட்லி முடிவுகள்!

(வடமராட்சி)

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஹாட்லிக் கல்லூரியின் பரீட்சை முடிவுகள்:

பரீட்சைக்குத் தோற்றியவர்கள் 203. சித்தியடைந்தவர்கள் 121. கணிதம் 4 'ஏ' சித்தியடைந்தவர் இருவர் கே. ஆனந்தகுமார், பி. வரகுணன். உயிரியல்விஞ்ஞானத்தில் சித்தியடைந்தவர் 4 'ஏ' கே. சிவராமன் 3 'எ', 1 'பி' சித்தியடைந்தவர்கள் ஆறு பேர். 3 'ஏ' 'சி'யில் சித்தியடைந்தவர்கள் மூன்றுபேர். 2 'எ' 2 'டி'யில் சித்தியடைந்தவர் மூன்று பேர். (51)

## சம்பத்தரிசியார் திருநாள் சனி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அர்ச் சம்பத்தரிசியாரின் திருநாள், சனிக்கிழமையாழ்ப்பாணம்சம்பத்தரிசியார்கல்லூரியில் சிறப்பாகக் கொண்டாடப் படவுள்ளது.

நாளை மறுதினம் காலை மேற்படி கல்லூரியின் தேவாலயத்தில் விசேட ஆராதனையும், திருப்பலி பூசையும் நடைபெறும். இவ் ஆராதனையில் கல்லூரி மாணவர்களும், பழைய மாணவர்களும் கலந்து கொள்வார்கள். இதைத் தொடர்ந்து கல்லூரி அதிபர் பழைய மாணவர்களுக்கு விருந்துபசாரம் அளித்து கௌரவிப்பார். மாலை, பழைய மாணவர் சங்கம் கல்லூரி அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் தேநீர் விருந்தளித்து கௌரவிப்பர். (வி)

## இந்தியப் படையினருக்கு பிரியாவிடை செய்தி உண்மைக்கு புறம்பானது

(பருத்தித்துறை)

இந்திய அமைதிப்படையினருக்கு வடமராட்சி மக்கள் உருக்கமான பிரியாவிடை என இந்திய உயர் ஸ்தானிகராலயத்தை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்ட செய்திக்கு பருத்தித்துறை பிரஜைகள் குழு பலத்த கண்டனம் தெரிவித்து மறுப்புத் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறை பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. வீ. எஸ். மகேஸ்வரனுல் பிரஜைகள் குழுவின் சார்பில் விடுககப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இந்திய அமைதிப்படையினருக்கு வடமராட்சி மக்கள் உருக்கமான பிரியாவிடை என வெளிவந்த செய்தி முற்றிலும்உண்மைக்கு புறம்பானதென்பதை பருத்தித்துறை பிரஜைகள்குழு, பொதுமக்கள் ஆகியோரின் சார்பில் நாம் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம்.

பொய்யான இச்செய்தியில் பொதுமக்கள் வரிசையாக நின்றனர். அமைதிப்படையினருடன் வடமராட்சிப் பகுதியின் முக்கியஸ்தர்கள், பிரஜைகள் குழு அங்கத்தவர்கள் 10 கிலோ மீற்றர் தூரம்வரை இந்திய அமைதிப்படையினருடனேயே நடந்து வடமராட்சி எல்லையைக் கடக்கும் வரை பார்த்துநின்றனர் என அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது உண்மைக்குப் புறம்பானதாகும். (52)

## புதிய நிர்வாகிகள்

(இளவாலை)

கீரிமலை செல்வா சனசமூக நிலையத்தின் நடப்பு வருடநிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோ.ர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ. பாலகிருஷ்ணன் உபதலைவர் சீ. சுந்தரலிங்கம், செயலாயர் க. அருள்லிங்கம், உப செயலாளர்: சு. கயேந்திரன், பொருளாளர்: சோ. சுபாஸ்சந்திரபோஸ், மேலும் நான்கு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். 138

## ஓவிய, சிற்பக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவின் ஆதரவில் மாற்குவின் ஓவிய சிற்பக்கண்காட்சி இம் மாதம் பதினேழாம் பதினெட்டாம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

86ம் ஆண்டு யாழ்ப்பாணம் சம்பத்திரியார் கல்லூரியில் பெற்ற பல்துறைக்கண்காட்சியில் மாற்குவின் ஓவியங்கள் கிற்பங்கள் மக்களின் பெரும் பாராட்டைப்பெற்றன.

இவரைப்பற்றிய 'தேடலும் படைப்புலமும்'' நூல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

இந்நிகழ்ச்சிகளின்சிறப்பம்சமாக ஞாயிற்றுக்கிழமை மாலை நான்குமணிக்கு மாற்குவின் ஓவியங்களும் சிற்பங்களும் பற்றிய கலந்துரையாடலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில்ஓவியா ''ரமணி'' சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். (12)

## எதிர்க்கட்சிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டித்துள்ளன.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஜனநாயக நடைமுறைகள் தடைசெய்யப்படுவதாகவும் குற்றம் சாட்டியே இந்த கூட்டம் நடைபெறவிருந்தது. (சி)

# வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு மேலதிக இராணுவம் இல்லை!

## ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸார் இன்னும் ஒரு சில தினங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமது கடமைகளைப் பொறுப்பேற்க விருக்கின்றார்கள் என பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இந்திய அமைதிப்படை விலகலை அடுத்து, வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு மேலதிகமாக இராணுவத்தினர் எவரையும், அனுப்புவதில்லை என்றும் அங்கு தற்போது முகாம்களிலுள்ள இராணுவத்தினர் பொலிஸார் தமது கடமைகளை சீராக செய்வதற்கு மட்டும் உதவி புரிவார்கள் என்றும், இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ் போராளிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்டிருந்த ''அனுவசியயுத்தத்தில்'' இலங்கை அரசுக்கு 5000 கோடி ரூபா செலவானது என்றும், இப்பணத்தை நாட்டின் விருத்திக்கு பயன்படுத்தி இருக்க வேண்டும் என்றும், அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கவலை தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் 1500 இந்திய அமைதிப் படையினரே உள்ளனர். இவர்களும் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் இந்தியா திரும்பி விடுவார்கள் என்று அமைச்சர் மேலும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (அ)

# 'ரம்போ' உட்பட பல நவீனரக ஆயுதங்கள் எம்மிடம் உள்ளன

**- தயாளன்**

(திருமலை)

''விடுதலைப் புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிடவில்லை அதனால்தான் ஆறுவது சட்ட மூலத்தை நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது'' என்று திருமலை மாவட்ட விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. தயாளன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

ஜனாதிபதி திரு. பிரேமதாசா எமது கோரிக்கைகள் பலவற்றுக்கு செவிசாய்த்துள்ளார். நாம் தொடர்ந்தும் ஆயுதங்களின்மேல் நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் குறைவாகவே உள்ளது.

'ஆனாலும் நாம்மிகுந்தபலத்துடன் இருக்கிறோம். பலநவீனரக ஆயுதங்களும் எம்மிடம் உள்ளன. 'ரம்போ' ஆயுதங்களும் கூட எம்மிடம் உள்ளது. எமதுதாயகப் பிரதேசமான ஈழக்கோரிக்கையைநாம் கைவிடவில்லை எனவேதான் ஆறுவது ஷரத்தை நீக்குமாறு ஜனாதிபதியை கேட்டுள்ளோம்''. (சி)

# இப்படியும் நடக்கிறது

நமது கலாசார அழிவுக்கு அன்று எத்தனையோ காரணங்கள் இருந்தாலும்: தென்னிந்திய திரைப்படங்களும், தரம் குறைந்த 'இலக்கிய' மன்னிக்கவும், பொழுதுபோக்கு ஏடுகளும் டிஸ்கோ டான்ஸுகளும் காரணம் என்று சொல்லலாம்!

நமது மண்ணில் அன்று கொடிகட்டிப் பறந்த நாடகங்களும் நாட்டுக்கூத்துகளும் இன்று காணவில்லையே என்று மனம் புளுங்கிக்கொண்டிருந்த நேரத்தில் முல்லைத்தீவிலிருந்து ஒரு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது.

'சிலப்பதிகாரம் தந்த கோவலன்' என்னும் நாட்டுக்கூத்து முல்லைத்தீவில் அடுத்தவாரம் பல இடங்களிலும் மேடையேறவிருக்கிறது.

இதில் 'பிளஸ் பொயின்ற்': முழுக்க முழுக்க ஆசிரியர்களும் சில அரசாங்க அதிகாரிகளுமே நடிக்கும் மேற்படி நாட்டுக்கூத்தில்; பின்னணிப் பாடகர்கள் முழுவதுமே ஆசிரியர்களும் ஆசிரியைகளும் தான்!

மேலதிகத் தகவல்; 'சிலப்பதிகாரம் தந்த கோவலனி'ல் மாதவியாக வந்து, மேடையை அதிரவைத்து, ரசிகர்களையே திகைக்கவைக்கப் போகிறவர் ஓர் ஆசிரியை! ''இவ்வளவு திறமை இவரிடமா'' என்று தயாரிப்பாளரே அதிர்ந்துபோனாராம்]

நமது கலாசாரத்துக்கு புத்துயிர் அளிக்கப்போகும் மேற்படி நாட்டுக்கூத்து, இன்றைய சூழலில் ஒரு திருப்பு முனையாகட்டும்!

''ஊடுருவி''

# யாழ்ப்பாணத்தில் புத்தாண்டு விளையாட்டு விழா நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஏப்ரல் மாதம் 15ம் திகதி புத்தாண்டு விளையாட்டு விழா நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து மாநாடொன்று யாழ்ப்பாண செயலகத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில், இவ்விழாக்கள் தமிழர் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவேண்டுமென தீர்மானிப்பட்டது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக தமிழ்பண்பாட்டு நங்கைத் தெரிவு ஒன்றும் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபா பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு வழங்கப்படும். இதற்கான முழுச்செலவினங்களையும் லேக்ஹவுஸ் நிறுவனமும், காப்புறுதி கூட்டுத்தாபமும் வழங்கவுள்ளன. (12)

# சபாஷ் நாவற்குழி

(நாவற்குழி)

நாவற்குழி மகாவித்தியாலயத்திலிருந்து க. பொ. த உயர்தரப்பரீட்சைக்குத்தோற்றிய ஐந்து மாணவர்களும் சித்திபெற்று சாதனை நிலைநாட்டியுள்ளனர்.

மேற்படி ஐந்து மாணவர்களில் இருவர் பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற தகுதிபெற்றுள்ளனர்.

பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த இம்மாணவர்களை அதிபரும், ஆசிரியர்களும் வெகுவாகப்பாராட்டினார்கள். (107)

# பிரிவுபசாரம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபராக பணிபுரிந்து தற்பொழுது கிளிநொச்சி மாவட்ட அரசாங்கஅதிபராக செல்லும் திரு. க. மாணிக்கவாசகருக்கு யாழ். செயலகத்தில் பிரிவுபசார வைபவமொன்று நடைபெற்றது.

யாழ். திட்டமிடல் பகுதியினரும், புனர்வாழ்வு இணைப்புக் குழுவினரும் இணைந்து நடாத்திய இவ்விழாவிற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமை வகித்தார். (71)

# தபால்சேவை வழமைக்குத் திரும்புகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பிரயாணிகளின் வசதி கருதி தபால் பெட்டி ஒன்றை அமைக்க யாழ் தபால் அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாண நிலைமைகள் தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதையடுத்து தபால், சேகரிப்பு வேலைகளும் சுமுகமாக நடைபெறத் தொடங்கியுள்ளன. நகரப் பகுதிகளில் தபால் பெட்டிகள் இல்லாதிருந்த பல இடங்களில் புதிய பெட்டிகளை அமைக்க பதினாறு புதிய தபால் பெட்டிகள் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

யாழ் குடாநாட்டிற்கு தபால் சேகரிப்பதற்கென ஆறு புதிய வாகனங்கள் அண்மையில் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. (123)

# வைத்தீஸ்வரா முதலிடம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை தெற்கு கொத்தணிப்பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. போட்டிகளில் யாழ். வைத்தீஸ்வரவித்தியாலயம் 319 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்றது.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்கபாடசாலை 210புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடமும் யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயம் 69 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடமும்பெற்றன போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வண். தென். கொத்தணி உப அதிபரும் யாழ். சன்மார்க்க வித்தியாலய அதிபருமானதிரு எஸ். நடேசபிள்ளை கலந்துகொண்டார்,

# கிராமசேவை அலுவலர் பிரிவு விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் பதினேழு கிராம சேவை அலுவலர்கள் பிரிவுகளை உள்ளடக்கியிருந்த கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு, தற்போது முப்பத்தொரு கிராம சேவை அலுவலர்கள் பிரிவுகளாக விரிவடைந்துள்ளது.

இப் புதிய பிரிவுகளில் தற்போது கிராம சேவை அலுவலர்கள் கடமையாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

கிராம சேவை அலுவலர் பிரிவுகள் அதிகரித்துள்ளதால் இம்பிரிவுகளில் உள்ளமக்களின் அரச தொடர்புகள் இலகுவாக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் சிரமமின்றி அரசாங்கத்துடனான தமது கடமைகளை மேற்கொள்ளஇத்திட்டம் வகை செய்துள்ளதாக மக்கள் கருதுகின்றனர்,

கடந்த காலங்களில் தனிக் கிராமசேவையாளர் பிரிவாக இருந்த மண்டைதீவுக் கிராம சேவை அலுவலர் பிரிவு தற்போது மண்டைதீவு கிழக்கு, மண்டைதீவு தெற்கு, மண்டைதீவு மேற்கு என மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. (123)

# சிலப்பதிகாரம் தந்த கோவலன்

(ஒட்டுசுட்டான்)

முல்லைநாட்டார் வழக்கியல் பாதுகாப்பு கழகததிற்காக முல்லைத்தீவு அரச அதிகாரிகளும், ஆசிரியர்களும் வழங்கும் 'சிலப்பதிகாரம் தந்த கோவலன்'' நாட்டுக்கூத்து நடைபெறவுள்ளது.

இம் மாதம் 18ம் திகதி முள்ளியவளை வித்தியானந்தகல்லூரியிலும், 19ம் திகதி புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் 20ந் திகதி முல்லைத்தீவிலும், 23ம் திகதி கற்சிலைமடு மகாவித்தியாலயத்திலும் மேற்படி நாட்டுக்கூத்து நடைபெறும். முல்லைத்தீவ கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. மெற்றூஸ்மயில் இந்த நாட்டுக்கூத்தைத் தயாரித்துள்ளார். (144)

# ஜனசவிய முதற் பத்திரம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பரந்தன், குமரபுரம் கிராமசேவையாளர் பகுதி மக்களுக்கான ஜனசவிய வறுமை நிவாரணத்திற்கான முதற்பத்திரம் வழங்கும் பணி இவ்வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குமரபுரம் கிராமசேவையாளர் பிரிவில் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு ஜனசவிய நிவாரணம் கிடைத்துள்ளதாகவும், அதற்கான பத்திரமே இப்போது வழங்கிக்கொண்டிருப்பதாவும் இவர்களுக்கான குடும்ப அட்டை மறுவாரமே வழங்கப்படுமெனவும் குமரபுரம் கிராம சேவையாளரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இக்கிராம சேவையாளர் பிரிவில் கால் ஏக்கர் பகுதி தற்பொழுது பிரிக்கப்பட்டு உமையாள்புரம் கிராம சேவையாளர் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளதால் கால் ஏக்கர்பகுதி மக்கள் இப்பத்திரத்தை புதிதாக இணைக்கப்பட்ட கிராம சேவையாளரிடமே பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மேலும் குடும்பப் பிரச்சனைகள் காரணமாக பிரிந்திருக்கும் குடும்பங்களுக்கும் உணவு முத்திரை அற்ற குடும்பங்களுக்கும் இப்பத்திரம் முதற்கட்டத்தில் வழங்கப்படமாட்டாதெனவும் இவர்களுக்கான பத்திரம் விசாரணைகளின் முடிவில் இரண்டாம் கட்டமாக வழங்கப்படலாமெனவும் தெரிவித்தார். (56)

# பஸ் சேவை நிறுத்தம்; மக்கள் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ் நகரிலிருந்து மானிப்பாய் - சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு ஆகிய இடங்களுக்கு ஊடாக கீரிமலை செல்லும் 788 இலக்க பஸ் சேவை கடந்த இருவார காலமாக முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீசன் டிக்கட் மூலம் செல்லும் கல்லூரி மாணவர்கள், அரச ஊழியர்கள் இதனால் மிகவும் கஷ்டமடைந்துள்ளார்கள்.

முன்னர் தினசரி ஆறு பஸ் சேவைகள் நடைபெற்ற இந்த வீதியில் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது குறித்து மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (72)

# புதிய வடிசாலை சமாசம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி தெ. ப. பொ. கூ. சங்கம், பளை தெ. ப. பொ. கூ. சங்கம் ஆகியவை இணைந்து வடிசாலை சமாசமொன்றை உருவாக்க முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. (152)

# நெடுந்தீவில் உரக் களஞ்சியம்

(யாழ்ப்பாணம்)

''போக்குவரத்து ஒழுங்கின்மை, கல்வி மாற்றம், சுகாதார வசதியின்மை காரணமாக புறக்கணிக்கப்பட்டிருக் நெடுந்தீவு மக்களுக்கு கமநல சேவை நிலயத்தினர் பல உதவிகளைச் செய்யவிருக்கிறார்கள். அதற்கு முன்னேடியாக இப்பொழுது நாலுசில்லு உழவு யந்திரத்தை முதலில் வழங்குகிறோம்'' என்று யாழ். கமநல சேவை நிலயத்தினர், நெடுந்தீவு கமநலச்சேவை நிலயத்துக்கு உழவுயந்திரம் வழங்கும் வைபவத்தில் வடக்கு- கிழக்கு மாகாணசபை கமநலச் சேவை ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்;

,,அத்தியாவசியமாக ஒருஉரக் களஞ்சியத்தை அமைப்பதற்கும், இங்குள்ள வாய்க்கால்களை திருத்தி அமைப்பதற்கும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன்'' என்றார்.

விழாவுக்கு திரு. நா. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார்.

யாழ். மாவட்ட கமநலச் சேவை உதவி ஆணையாளர் திரு. ஆ. சிவசாமி தமதுரையில் தென்னை, பனை, வேம்பு போன்ற மரங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும், கால் நடைகளின் தரத்தை உயர்த்துவதோடு, சிறுநீர்ப் பாசனக் குளங்களைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (152)

# கிழக்கு மாகாணத்திலும் கூட்டுறவு ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

ஊழியர் சங்கம் இல்லாத கூட்டுறவுச் சங்கங்களில் சங்களை அமைக்க யாழ்.மாவட்ட கூட்டுறவு ஊழியர் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் மாத்திரம்தான் ஊழியர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் ஏனைய இடங்களில் சங்கங்களை அமைக்க யாழ். கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (152)

# தேங்காய் எண்ணை ஆலை நிறுவ ப. நோ. கூ. ச. முடிவு

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆறு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் தேங்காய்எண்ணெய் ஆலை ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளது.

சங்கத்தின் பொதுக் கூட்டம் சங்கமண்டபத்தில் நடைபெற்றபோது இத் தீர்மானம் எடுக்கப்பட்டது

இப் பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக 'ஈரோவில்' ஸ்தாபனத்தின் மதிப்புத் திட்டத்தின் பிரகாரம் தேங்காய் எண்ணெய் ஆலை அமைக்கப்படவுள்ளதாக மேற்படி தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், பின் வரும் தீர்மானங்களான,

* சங்கத்தின் அரிசி ஆலையை மேலும் விஸ்தரிக்குமுகமாக புதிய இயந்திரங்களை இணைத்தல். * கடமைக்கு ஒழுங்காக சமுகளிக்கும் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்குதல். * இலங்கை நுகர்ச்சி கூட்டுறவுச்சங்க ஒன்றியத்தில் அங்கத்துவம் பெறுதல் ஆகியனவையும் நிறைவேற்றப் பட்டன.

## இவ்வாரக் கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரிகளிடையே இவ்வாரம் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் பின்வருமாறு:

யாழ். இந்துக் கல்லூரியும் யாழ். மத்திய கல்லூரியும் எதிர்வரும் வெள்ளியும், சனியும், யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

சென். ஜோன்ஸ் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் எதிர்வரும் வெள்ளியும், சனியும், சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மோதுகின்றன.

சென். பற்றிக்ஸ் கல்லூரியும். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் வருடாந்தம் நடைபெறும் 'ஐம்பது ஓவர்கள்' கிரிக்கெட் போட்டி, எதிர்வரும் திங்கட்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 21ல் நடைபெறும். (152)

## கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணப் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் பல ''ஈழநாடு'' காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள. உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். விபரங்கள் வருமாறு:

நாகராசா வரதராஜா, புங்குடுதீவு, அப்புஹாமி கிறிஸ்ரி, குருநகர். சின்னத்தம்பி செல்லத்துரை. அளவெட்டி. சண்முகம் இராபநாதன், நல்லூர். இரத்தி சண்முகராசா, வண்ணார் பண்ணை. செல்லப்பா அருணசலம், நயினாதீவு. செல்வ பூமணி அரியரத்தினம், உடுப்பிட்டி. நாகேஸ்வரி ஞானகணேசபிள்ளை, சுதுமலை. புஷ்பராணி அம்பலவாணர், நெடுந்தீவு கிழக்கு. தங்கபாக்கியம் ஆண்டி, துன்னாலை: சின்னத்துரை கோமளாதேவி புலோற்பளை. கதிரமலைநாதன் சிற்பபேசினி, புலோற்பளை. ஆ-ர்

## சங்கானையில் விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அனுசரணையுடன், விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் மெய்வல்லுநர் போட்டி 17-ம் 18-ம திகதிகளில், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம அதிதியாக, யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

இவ்விளையாட்டுப் போட்டியில இம்முறை ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும், 10 மைல் மரதன் ஓட்டப் போட்டியும், பெண்களுக்கான 3 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் சிறப்பு விளையாட்டாக நடாத்தப்படும்.

மேற்படி விளையாட்டுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், சங்கானை விளையாட்டு அதிகாரி திரு. பீலிக்ஸ் மேற்கொண்டுள்ளார். (வி)

# கிராமசேவையாளர்கள் இடமாற்றம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமசேவகர்களின் புதிய இடமாற்றப்பட்டியல் வெளியாகியுள்ளது.

இதன்படி இன்றுமுதல் இது நடைமுறைக்கு வருகின்றன.

இதற்கான பட்டியல்கள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும் யாழ். செயலகத்திலிருந்து நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (71)

## தடுப்பு ஊசி

(காங்கேசன்துறை)

வலி-வடக்கில் கோழிகளுக்கு கொள்ளைநோய் ஏற்பட்டுள்ளதால் உடனடியாக தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது உள்ள காலநிலை காரணமாக கோழிகளுக்கு கொள்ளைநோய் ஏற்பட்டு அவை இறந்து விடுவதாகதெரிவிக்கப்படுகிறது.

இதனை தடுப்பதற்கு உடனடியாக தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு தெல்லிப்பழை கால்நடை வைத்திய அதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமம்தோறும் தடுப்பூசி ஏற்றும் வேலைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (86)


ஹரன் திரையில் 4-வது வெற்றிவாரம்

நாயகன் இன்றைய நாயகன்!


தணிக்கைசபையால் தடைப் பட்ட நாயகன்! பரிசுகள், விருதுகள்பெற்ற நாயகன்!]

தினசரி 10-30, 2-30, 6-30

★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜனகராஜ்



நாயகன்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் முன்னாள் பொதுச் செயலர் அமரர் த. இராசரத்தினம் ஞாபகார்த்தமாக 1989ம் ஆண்டு பல்கலைக்கழக கல்வியாண்டிற்கு குரும்பசிட்டியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட செல்வன் சு.சேந்தனுக்கு புலமைப் பரிசிலை மூலை த்தீவு மக்கள்வங்கி உதவி முகாமையாளர் திரு. எஸ். சிவபாதம் வழங்குவதையும், அருகில் ஞாபகார்த்த ஆளுநர் குழு உறுப்பினர் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை நிற்பதனையும் காணலாம்

# வேலணை மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் தாராள உதவி

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் பரவி வரும் மாலைக்கண் நோயிலிருந்து மாணவ மாணவிகளைக் காப்பதற்கு உதவியாக 'ஏ' சத்து நிறைந்த மருந்து வகைகளை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளதாக வைத்தியசாலை டாக்டர் திரு. எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார்.

சுமார் நாலாயிரம் ரூபா பெறுமதியான மீன்எண்ணைக் குளிசைகள் போன்ற 'ஏ' சத்து மருந்துகளைச் செஞ்சிலுவைச் சங்கம் வேலணைக்கு வழங்கியுள்ளது.

கடந்த வாரம் வேலணைக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தீவுபகுதியில் வரட்சியால் பாதிப்புற்ற இடங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு வசதியாக 'பவுசர்' ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் வேலணையில் நடைபெற்ற பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறியில் கலந்துகொண்ட வறிய யுவதிகளுக்கு, தொழில் செய்வதற்கான உபகரணங்களும் உதவிப் பணமாக ஒவ்வொரு உற்பத்தியாளர்களுக்கும் தலா ரூபா ஐந்நூறும் செஞ்சிலுவைச் சங்கத்தினல் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில் யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கலாநிதி ஆர். தெய்வேந்திரன், பொருளாளர் திரு.கே. பாலசுப்பிரமணியம், செயலாளர் திரு எஸ். சிவனேந்திரராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான பிரதிநிதி திரு. நெஒகி கொகாவோ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (123)

## இராசி பலன்

15 - 03 - 1990

வியாழக்கிழமை

மேடம்: எதிர்பாராத செலவினம். குடும்பத்தில் மகிழ்ச்சி. தொழில் லாபம் நண்பருதவி.

இடபம்: குடும்பத்தில்பயம். உடல் நலக் குறைவு. பயணங்களால் செலவு. தொழில் குறைவு.

மிதுனம்: நிம்மதியற்ற போக்கு. தொழில் அலைச்சல். குடும்பத்தில் சச்சரவு. மனக் கவலை.

கடகம்: பணவரவு. குடும்பத்தில் குதூகலம். மாமனார் உதவி. அறிஞர் சந்திப்பு

சிங்கம்: குடும்பக் கலகம். விரோத மனப்பான்மை. புதிய நெருக்கடி. செலவு.

கன்னி: மங்கள காரியம். சுபச்செய்தி.பண்பானசெயல் குடும்ப நன்மை. தொழில் லாபம்.

துலாம்: பணக் கஷ்டம் தொழில் பாதிப்பு. வேலைப் பளு. அவசரப் போக்கு. கடன் படல்.

விருச்சிகம்: நீண்ட தூர பயணம். மக்கள் மகிழ்ச்சி. தாய் வழி உதவி. தொழில் முயற்சி.

தனுசு: அந்நிய தலையீடு அதிகாரிகள் பகை. நீசர்நட்பு. தொழில் பாதிப்பு.

மகரம்: விதண்டா வாதம். தொழில் பிரச்சனை. குடும்பக் கலகம். பணமுடை.

கும்பம்: கடமை தவறுதல். குடும்ப ஒற்றுமைக் குறைவு தொழில் லாபம். பாராட்டு.

மீனம்: புதிய சிந்தனை. தொழில் பாராட்டு. பொதுப் பணி. வேலையாள் சகாயம். குடும்ப சிறப்பு. (12)

## இன்று மடு மாதா திருவிழா

(மன்னார்)

மன்னார் மடுமாதாதிருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும். இதனையொட்டி நவதின வழிபாடுகளும், விசேட மறையுரைகளும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

யாழ் நகரிலிருந்து அதிகளவு பக்தர்கள் மடுமாதாவின் அருளை நாடி வந்துள்ளார்கள். வழமைக்கு மாறாக மடு, பங்குனித் திருவிழா ஆடித்திருவிழாவாக மாறி மக்கள் கூட்டம் காணப்படுகின்றது.

வேஸ்பர் ஆராதனையும், திவ்விய நற்கருணைநாதரின் பவனியும் நேற்று இடம்பெற்றது. திருவிழா தினத்தன்று மன்னார் மறைஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் தலைமையில்கூட்டுத்திருப் லிப் பூசையும் நடைபெறுமென மடுத்திருப்பலி ஆலயபரிபாலகர் வணபிதா ஏ. யேசுராசா தெரிவித்தார்.

# பருத்தித்துறை நகர. புனரமைப்புத்திட்டம்: ரூ.450 லட்சம் ஒதுக்கப்பட்டது

# இவ்வருடமே நிதியை பயன்படுத்த நிபந்தனை

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரப் புனரமைப்புக்காக கனேடிய அரசு, ஸ்ரீலங்கா தேசிய புனர்நிர்மாணப் புனருத்தாரண அமைச்சு ஊடாக வழங்கிய 450 லட்சம் ரூபா, இவ்வருட இறுதிக்குள் செலவுசெய்யப்படாவிடில் அப்பணம் மத்திய அரசுக்குப் போய்ச் சேரும்.

இத்தகவலை நகரசபை செயலாளர் திரு. சண்முகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீதிகளுக்கு 136 லட்சம் ரூபாவும், சட்டிடங்களுக்கு 251 லட்சம் ரூபாவும், மின்சாரசுதிற்கு 63 லட்சம் ரூபாவும், இரு மாடி சுப்பர் மார்க்கட்டுக்கு 108 லட்சம் ரூபாவும், பொது நூலகத்திற்கு 1½ லட்சம் ரூபாவும், கிளை நூலகத்திற்கு 8 லட்சம் ரூபாவும், நகரசபை அலுவலகத்திற்கு 15 லட்சம் ரூபாவும், திறந்த வெளியரங்கிற்கு 3 லட்சம் ரூபாவும், சந்தை பொது மலசலகூடத்திற்கு 1½ லட்சம் ரூபாவும், பஸ்நிலையத்திற்கு 69 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறினர்.

இவை யாவும் பூர்த்தியாகும் பட்சத்தில் பருத்தித்துறை நவீன நகராகக் காட்சியளிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (51)

## வான் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றவான்விபத்தொன்றில் மூவர் காயமடைந்தனர். வான் பலத்த சேதத்திற்குள்ளானது.

காயமடைந்தவர்களில் கே முருகதாஸ் (வயது 29) யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (.6)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் 53 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 53 பேர் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இப்பரீட்சை முடிவுகளின்படி இரண்டு மாணவர்கள் 2ஏ, 2பி தரத்திலான சித்தியையும் ஒரு மாணவர் 2 ஏ, 1 பி, 1 சி சித்தியையும், மூன்று மாணவர்கள் 1 ஏ, 1 பி, 2 சி, 1 ஏ, 3 சி தரத்திலான சித்திகளையும் பெற்றுள்ளனர்.

## உத்தரவிற்கு காத்திருக்கும் ஆளுநர்

(திருமலை)

"அரசின் அடுத்த உத்தரவிற்கு காத்திருக்கிறேன். அதையடுத்தே மற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனிவரட்ண தெரிவித்துள்ளார்.

திரு. வரதராஜப்பெருமாள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ள போதிலும் மாகாண சபையின் வழமையான அலுவல்களில் எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# 'புலிகள் முற்றாக ஆயுதங்களை ஒப்படைத்த பிறகே நாமும் அவற்றை ஒப்படைப்போம்' - சித்தார்த்தன்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் முற்றாக ஆயுதங்களை ஒப்படைத்த பின்னரே தாங்கள் ஆயுதங்களை ஒப்படைப்பார்கள் என தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) தலைவர் திரு ரி. சித்தார்த்தன் நேற்றுத் தெரிவித்தார்.

புளொட்டின் அரசியற் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (டி. டி. எல். எவ். உறுப்பினர்கள் வடக்குக் கிழக்கில் ஜனநாயக அரசியலில் ஈடுபடுவது மிகவும் கஷ்டமாகவுள்ளதென்றும், தற்போது இப்பகுதிகளைத் தன் ஆதிக்கத்திற்குள் வைத்திருக்கும் விடுதலைப் புலிகளிடமிருந்துவரும் எவ்வித சவால்களையும் எதிர்நோக்குவதற்குத் தங்களுக்கு ஆயுதம் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

"நாங்கள் அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்துள்ளோம் எங்கள் உறுப்பினகள், ஆதரவாளர்கள் குடும்பங்கள் இன்று கொல்லப்படுகின்றன. நாங்கள் எவ்வித உதவியுமின்றித் தவிக்கிறோம்" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அண்மையில் வவுனியாத் தொகுதியிலுள்ள செட்டிகுளத்திலும், அம்பாறைத் தொகுதியிலுள்ள மல்வத்தையிலுமுள்ள புளொட் முகாம்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அமைதிப்படையினர் வெளியேறிய பின்னர் இதுவரை 20 புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும், அதிகமான புளொட் முகாம்கள் தற்பொழுது காடுகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## திருமலை நகருக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன் தினம் அமைதிப்படை வெளியேறியதைத் தொடர்ந்து புலிப் போராளிகள் நகருக்குள் பிரவேசித்தனர். திருமலை புலிகள் பொறுப்பாளர் தயாளன் தலைமையில் வாகனங்களில் அணிவகுத்துப் புலிகள் நகருக்குள் வந்தபோது வீதிகளில் குழுமிநின்ற மக்கள் மகிழ்ச்சியாரவாரம்செய்து வரவேற்றார்கள்.

சிவன் கோவிலடியிலுள்ள ஈ. என் டி. எல். எவ். காரியாலயத்திற்குச் சென்று அதனைத் தமதாக்கிக்கொண்ட புலிகள், அங்கு புலிக்கொடியைப் பறக்கவிட்டனர். இதன்பின் ரெலோ முகாமிற்கும் சென்று அங்கும் புலிக்கொடியை ஏற்றிவைத்தனர்.

அமைதிப்படை வெளியேறியதைத் தொடர்ந்து நகரில் பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். சிங்கள மகா வித்தியாலயத்தில் இராணுவத்தினர் முகாமிட்டிருந்தனர்.

ஸ்தம்பித்த நிலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாணசபை கவர்னர் திரு. நளின் செனிவரத்ன, திருமலையில் தடங்கலின்றி சிவில் நிர்வாகம் தொடருமென்றும், நிலைமைகளை அவதானித்து தான் உடனுக்குடன் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்துவார் என்றும் கூறினர்.

## நடமாடும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம் மாநாட்டையொட்டி பனை அபிவிருத்திச் சபையின் கண்காட்சி, விற்பனை நிலையம், என்பனவும் அமைக்கப்பட உள்ளன.

நடமாடும் செயலகம் 15, 16, 17ந் திகதிகளில் புத்தளத்தில் நடைபெறும். (12)

# மரண அறிவித்தல்

## கனகசபை வாமதேவா

நல்லூரைச் சேர்ந்த கனகசபை வாமதேவா அவர்கள் 10-03-1990 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், சொர்ணாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபையின் மகனும், காலஞ்சென்ற C. T. நவரட்ணத்தின் மருமகனும், காலஞ்சென்ற தருமபுத்திரன், பரமேந்திரன், தியாகேந்திரன், சந்திரவதனி, மதிவதனி, குமரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரட்ணராஜா (கண்ணன்), சௌந்தரராஜன், நீலா, நந்தினி ஆகியோரின் மாமனாரும், சதர்சனு, சஞ்சீவ், தாட்சாயினி, நிலாந்தினி, அருச்சுனு, ராஜ், அருண், மதுசூதனன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், இரத்தினசபாபதி, காலஞ்சென்ற நடராஜா நாகேந்திரா ஆகியோரின் சகோதரரும காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன், என். சம்பந்தன், திருமதி வெற்றிவேலு, திருமதி பரமேஸ்வரன், திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15-03-1990) வியாழககிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனத்திறகாக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்வண்ணம் வேண்டுகின்றோம்.

327, நாவலர் வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்
(சி 3601)

# வடக்குக் கிழக்கில் வீதிகளை பராமரிக்க 400 கோடி ரூபா தேவை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வீதிகள் புனரமைப்பு செய்வதற்கு சுமார் 400 கோடி ரூபா வரை தேவையென புள்ளிவிபரம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதற்கான நிதிஉதவியை அரசு வெளிநாடுகளிலிருந்தே பெறவேண்டியிருப்பதாகவும் அந்த புள்ளி விபரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவிகளை வெளிநாடுகள் வழங்காவிடின் வடக்கு - கிழக்கு பகுதியில் வீதிப்புனரமைப்பு வேலைகள் மிகவும் காலம் தாழ்த்தப்பட்டு மேற்கொள்ள வேண்டிய நிலையும் ஏற்படலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## சர்வகட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பந்தமான நடைமுறை விடயங்களைப் பிரதிநிதிகள் குழு கலந்தாலோசனை செய்த பின்னர் செயற்குழுவில் முன்வைக்கப்பட்ட இருபது விடயங்களை மூன்று தொகுதிகளின் கீழ் இனம்பிரித்து வேலைசெய்வது என முடிவு செய்யப்பட்டது.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், ஜனநாயகச் செயல்முறையினை வலுப்படுத்துதல், சமூக பொருளாதார விடயங்கள் ஆகிய தொகுதிகளாகப் பிரிக்கப்படுதல்வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இனங்காணப்பட்ட இருபது விடயங்கள் பின்வருமாறு:- அதிகாரப் பரவலாக்கல், சீர்திருத்தங்கள், சர்வஜன வாக்குரிமை, விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் இறுதி எல்லை, சிறுபான்மையோரின் பிரதிநிதித்துவம், தகவல் விடயங்களிற் சுதந்திரம், மொழிக் கொள்கையினை நடைமுறைப் படுத்துதல், கல்விக்கொள்கை, எல்லா இன மக்களையும் சமத்துவமாகவும், ஒற்றுமையுடனும் நடத்துதல், தேசிய காணிக் கொள்கை ஒன்றை வகுத்தல், ஜனநாயக செயல்முறையினை வலுப்படுத்துதல், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், நாட்டிலுள்ள அனைவரினதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், கட்சிமாற்றம் சம்பந்தமாக அரசியல் அமைப்பிலுள்ள ஏற்பாடுகளை வலுக்களை நீக்குதல், அரச சபைக்கு, குழுவிற்கு கூடிய அதிகாரங்களை வழங்குதல், பாராளுமன்ற ஷரத்துக்களை குழுக்களை அதிகளவில் பயன்பாட்டுக்கு எடுத்தல் ஆகியன உட்பட இருபது விடயங்களை உடனடியாகச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## திருமலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும் அந்த அதிகாரியும் புலிகள் பொறுப்பாளர் தயாவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் திருமலையில் எதிர்காலத்தில் இனக்கலவரம் எதுவும் ஏற்படாதவாறு தாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (சி)

## பருத்தித்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன மேற்படி அதிகாரிப்பால் மக்களின் தேவைகளைச் சாதாரணமாகத் தபாற் கந்தோர்கள் பூர்த்தியாக்கமுடியாத நிலையில் உள்ளன. இவ்விடயம் பற்றி பருத்தித்துறை பிரமுகர் குழுவினர் தபால் அமைச்சிற்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து அமைச்சு பொலிஸ்நிலையத்தை வெளியேறுமாறு பணித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி பொலிஸ் நிலையம் பருத்தித்துறை முனைப்பகுதியில் நிறுவப்படலாம் எனவும் தெரியவருகின்றது. (51)

## முக்கிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த இராணுவ முகாம்களும் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளன.

### இராணுவ தளபதி உறுதி

மேலும் வடக்கு கிழக்கிலிருந்து இந்திய படைகள் முற்றாக வெளியேறியதும் அங்கு இலங்கை படைகள் எதுவும் அனுப்பப்படமாட்டாதென இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஹமில் டன்வன சிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி

## மீண்டும் திருட்டு

[உடுவில்]

சந்தரோடை வட்டாக்கை விசாலாட்சி அம்மன் கோவிலில் கதவு உடைக்கப்பட்டு சிவன், அம்மன் சிலைகள் பெயர்க்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க இயந்திரத் தகடு, மற்றும் 10,000/- ரூபா மதிப்புடைய கோவிற் பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பதாகவும் மேற்படி கோவில் கூரையால் உட்புகுந்து பொருட்கள் களவாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (104)

## பரீட்சை நாளை ஆரம்பம்

(அச்சுவேலி)

தொண்டமானாறு வெளிக்கள நிலைய பரீடசை சபையினால் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களிக்காக நடத்தப்படும் பரீட்சை நாளை 16ம் திகதி தொடக்கம் 28-ம் திகதி வரை நடைபெறும்.

விஞ்ஞானம், கலை, வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கு நடத்தப்படும் இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி. வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் தோற்றுகின்றனர்.

16ம் திகதி புவியியல், 19-ம் திகதி அளவையியல், 20-ம் திகதி தமிழ் 21ம் திகதி இந்து நாகரிகம, கிறிஸ்தவம், இஸ்லாம் நாகரிகம். 22-ம் திகதி பொருளியல். இரசாயனவியல், 23ம் திகதி மனைப் பொருளியல், 26ம் திகதிகணக்கியல், பௌதீகவியல், 27-ம் திகதி வர்த்தகம் நிதி, பிரயோக கணிதம், விலங்கியல், 28ம் திகதி தூய கணிதம், தாவரவியல் ஆகிய பாடங்கள் நடைபெறும், (74)

இப்பத்திர்கை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.